# <u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>

அ.வ.எண்.181/2021, வா.சா. 2. மோகன்ராஜ்

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04 ம் தேதியில் வாதி தரப்பு சாட்சியாகிய, வா.சா .2 ஆன மோகன்ராஜ் என்பவரின் வாக்குமூலம் (1969 ஆண்டு 44 வது விதியின்படி) திருமதி. R. சுஜாதா., B.Sc., L.L.M., முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு உறுதியளிக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | – | மோகன்ராஜ் | தொழில் | – | |
| த/பெ க/பெ | – | கோபால் | ஜாதி | – | |
| கிராமம் | – | ஒடையகுளம் | வயது | – | 49 |
| தாலூக்கா | – | ஆனைமலை | தேதி | – | 04.02.2026 |

முதல் விசாரணை

நான் ஒடையகுளம் கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும்.

| Sl.No. | Date | Exhibits Marked | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1 | | **வா.சா.ஆ. 8** | வா சா 2 எனது ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |

என்னிடம் காட்டப்படும் வாசா ஆ 1 உயில் சாசனம் ஆகும் மேற்படி உயில்சாசனத்தில் நான் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்துள்ளேன். சாட்சிக்காக மேற்படி கையெழுத்தை நான் செய்தேன். என்னுடன் கரட்டுபாளையத்தைச் சேர்ந்த விமலா என்பவர் சாட்சி கையொப்பம் செய்தார். மேற்படி உயிலை ராஜேந்திரன்

ஒப்பம்/–(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

அவரது மனைவி வனிதாமணிக்கு எழுதிவைத்தார். உயிலில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். ராஜேந்திரன் மேற்படி உயிலில் நான்கு ரேகை வைத்துள்ளார். அவர் ரேகை வைத்ததை நான் பார்த்தேன். நாங்கள் சாட்சி கையொப்பம் இட்டதை ராஜேந்திரன் பார்த்தார்.

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி